1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இயல், இசை, நாடகம் என்பதாக மூன்று துறை வல்லுநர்களையும் இணைத்து ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அவர்கள் கலைமாமணி பட்டம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்—புகழ் பெற்றவர்களாக இருக்க வேண்டும்—வயதானவர்களாக இருக்க வேண்டும்—வறுமை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆண்டுதோறும்—இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற 10 பேர்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கலைமாமணிப் பட்டம் பெற்றவர்களுக்கு பொற்கிழி வழங்குவதுபோல—மேல்நாடுகளில் பாடுகிற கலைஞர்களது குரலையே இன்ஷூர் செய்கிறார்களே, அதன்மூலம் அவரது குரல் நயம் குறைந்து, மூப்படைகிறபோது கணிசமான தொகை இன்ஷூரன்ஸ் மூலம் கிடைக்க வழி செய்யப் பட்டிருக்கிறதே. அதுபோல நம்முடைய தமிழகத்திலும் எற்பாடு செய்ய முன்வருவார்களா? அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. அப்படிச் செய்வதாக இருந்தால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பது அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய ஒன்று.

காஞ்சிபுரம் புற்றுநோய் நிலையம்.

* 211 **வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அரசு காஞ்சிபுரத்தில் புற்றுநோய்த் தடுப்புத் திட்ட நிறுவனத்தை உருவாக்கி வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழக அரசு 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய் நிலையத்தை அமைத்து புற்றுநோய் கட்டுப்பாடு முன்னேடி திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: இந்தச் சீரிய திட்டம் தாமதப்பட என்ன காரணம்? விரைவுபடுத்தத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: புற்றுநோய் தடுப்புத் திட்டம் என்ற முறையில், புற்றுநோய்த் தடுப்பு நிலையத்திலே, அதுவும் கருப்பையின் வாய்ப்புறத்தில் தோன்றுகிற புற்றுநோய் பற்றி, நோய் தோன்றுவதற்கு முன்கூட்டியே ஏற்படுகிற அடையாளங்களைப் பரிசோதனை செய்து, மருந்துகள் கொடுத்து, அதனைத் தடுக்கின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது. இது வீடு வீடாகச் சென்று—இருபது வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பெண்களையும் கேள்வி கேட்பதன் மூலம் உடல் கூற்றினை அறிந்து கொண்டு, ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

வெறும் தடுப்புத் திட்டம் என்ற முறையில் பணியாற்றினால் போதாது, புற்றுநோய் கண்டவர்களுக்கு விரிவாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று, ஏறத்தாழ 200 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவ நிலையம் காஞ்சிபுரத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதில் சிறிது தாமதம் இருக்கிறது. அது நிறைவேற்றிய பின்னர், சிகிச்சை வழங்கும் பணி தொடங்கும்.

ஊத்துக்கோட்டை மருந்தகக் கட்டடம்.

* 212 வினா. திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டை அரசினர் மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது நலத் துறை இயக்குநருடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த மருந்தகம் கட்டுவதற்கு ஏற்கனவே 30 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இடம் கிடைக்கவில்லை என்பதற்காக தாமதப்படுகிறது. இப்போது வேளாண்மைத் துறையினர் இடத்தைத் தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இந்த ஆண்டாவது கட்டிடத்தை கட்ட அரசு முன்வருமா?